//அவசரம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண். 2332 /ஆ4/ 20245 நாள்.04.06.2025

பொருள் : பள்ளிக்கல்வி –வேலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் –9,10,11,12 வகுப்பில் இடைநின்ற மாணவர்களின் விவரங்கள் கோருதல் – தொடர்பாக

பார்வை : வேலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய துணை இயக்குநர் /முதல்வர் (பொ) அவர்களின் கடித ந.க.எண்.1050/சே/2024 நாள் 20.05.2025 இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள் 26.05.2025

பார்வையில் காணும் வேலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய துணை இயக்குநர் /முதல்வர் (பொ) அவர்களின் கடிதங்களுக்கிணங்க வேலூர் மாவட்டத்தில் 2023–2024 ஆம் கல்வியாண்டில் 9,10,11, ஆம் வகுப்புகளில் இடைநின்ற மாணவர்களுக்கு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கை செய்திட ஏதுவாக பள்ளிகளில் தொடர்ந்து வருகை புரியாத மாணவர்களின் விவரங்களை, துணைஇயக்குநர் /முதல்வர் (பொ) அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்,வேலூர் – 632010. என்ற முகவரிக்கு அனுப்பிட அனைத்து வகை உயர்/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மேற்காணும் விவரங்களை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பள்ளிகள் அனுப்புவதை உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு :

- பார்வை கடித நகல்

05/06/25

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ).
வேலூர்.

04/6/25

பெறுநர்,

- அனைத்து வகை உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம் .

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
- துணை இயக்குநர் /முதல்வர் (பொ) அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்,வேலூர் – 632010. அவர்களுக்கு தகவலின் பொருட்டு கனிவுடன் அனுப்பிவைக்கப்படுகிறது.